2024ஆம் ஆண்டுக்கான

# குறுவை பருவ பயிர்களை உடனடியாக காப்பீடு செய்திடுக!

## விவசாயிகளுக்கு - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!

சென்னை, ஜுலை 4-

2024-2025-ஆம் ஆண்டில் குறுவை, சம்பா மற்றும் நவரை/ கோடை ஆகிய மூன்று பருவங்களிலும் பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப் படும். 2024-ஆம் ஆண்டு குறுவை பருவ பயிர்களை உடனடியாக காப்பீடு செய்ய விவசாயிகளுக்கு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவரது அறிவிப்பு வருமாறு:-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களது தலைமையிலான அரசு பொறுப்பேற்றது முதல் உழவர் பெருமக்களுக்கென தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில், வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், 2024-2025ஆம் நிதி ஆண்டின் தனி நிதிநிலை அறிக்கையில் ரூ.1,775 கோடி நிதி ஒதுக்கீட்டில் பிரதம மந்திரி பயிர்காப்பீட்டுத் திட்டம் நடப்பாண்டில் செயல்படுத்தப் படும் என அறிவித்தார்.



இதனைத் தொடர்ந்து தமிழ்நாட்டிலுள்ள 37 மாவட்டங்களில் 2024-2025ஆம் ஆண்டில் குறுவை, சம்பா, நவரை / கோடை ஆகிய மூன்று பருவங்களிலும் இத்திட்டத்தை செயல்படுத்த வேளாண்மைஉழவர் நலத்துறையால் அர சாணை 28.06.2024 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

2024ஆம் ஆண்டு குறுவை பருவத்தில் நெல், மக்காச்சோளம், துவரை, உளுந்து, பச்சைப்பயறு, நிலக்கடலை, ராகி, சோளம், கம்பு, தட்டைப்பயறு, எள், பருத்தி, சாமை மற்றும் கொள்ளு ஆகிய 14 வேளாண் பயிர்களுக்கும் வாழை, மரவள்ளி, வெங்காயம், உருளைக்கிழங்கு, கேரட், கத்திரி, வெண்டை, மஞ்சள், தக்காளி, பூண்டு, இஞ்சி மற்றும் முட்டைகோஸ் ஆகிய 12 தோட்டக்கலைப் பயிர்களுக்கும் அறிவிக்கை செய்யப்பட்டுள் ளன.

2024 ஆம் ஆண்டு குறுவை பருவத்தில் அறிவிக்கை செய்யப்பட்ட பயிர்களுக்கான விவசாயி கள் பதிவு 2024 ஜுன் 21ஆம் தேதி முதல் ஒன்றிய அரசின் தேசிய பயிர் காப்பீட்டு வலைதளத்தில் மேற்கோள்ளப்பட்டு வருகிறது. இதில் முக்கிய பயிரான குறுவை நெற்பயிரை 2024 ஜுலை 31ஆம் தேதி வரை விவசாயிகள் காப்பீடு செய்து கொள்ளலாம்.

இத்திட்டத்தின் கீழ் மகசூல் இழப்பு, விதைப்பு / நடவு செய்ய இயலாத நிலை, விதைப்பு / நடவு பொய்த்தல், பகுதி சார்ந்த மற்றும் பயிர் வளர்ச்சி கால இடர் நிகழ்வுகளால் ஏற்படும் இழப்பு மற்றும் அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்பு போன்ற இனங்கள் காப்பீடு செய்யப்படுகின்றன.

எனவே, விவசாயிகள் எதிர்பாராமல் ஏற்படும் இயற்கை பேரிடர்களையும், பூச்சிநோய் தாக்குதலால் ஏற்படும் மகசூல் இழப்பு உள்ளிட்ட பல்வேறு காரணிகளையும் கருத்தில் கொண்டு அருகிலுள்ள பொது சேவை மையங்களிலோ (CSC) தொடக்க வேளாண்மை கூட்டுறவுக்கடன் சங்கங்களிலோ (PACCS) அல்லது தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலோ உரிய காப்பீட்டுக் கட்டணம் (Premium) செலுத்தி கடைசி தேதி வரை காத்திருக்காமல் நிர்ணயம் செய்யப்பட்ட காலக்கெடுவுக்குள் அதாவது 31.07.2024க்குள் தங்களது பயிர்களை காப்பீடு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும், புயல், வெள்ளம் ஆகியவற்றால் பயிர் சேதம் அடைந்த பிறகு அப்பயிரை காப்பீடு செய்ய இயலாது எனவும், காப்பீடு செய்வதற்கான கடைசி தேதியை எக்காரணம் கொண்டும் நீட்டிக்க வழிவகையில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

விவசாயிகள் இத்திட்டத்தின்கீழ் பதிவு செய்யும்போது முன்மொழிவு விண்ணப்பத்துடன், பதிவு விண்ணப்பம், கிராம நிர்வாக அலுவலர் வழங்கும் அடங்கல் / விதைப்பு அறிக்கை, வங்கிக் கணக்கு புத்தகத்தின் (Bank pass book) முதல் பக்க நகல், ஆதார் அட்டை (Aadhar Card) நகல் ஆகியவற்றை இணைத்து, கட்டணத் தொகையை செலுத்தியபின் அதற்கான இரசீதையும் பெற்றுக் கொள்ள அறிவுறுத்தப்படுகிறது. இது குறித்த கூடுதல் விபரங்களுக்கு வட்டார வேளாண்மை உதவி இயக்குநரையோ அல்லது வேளாண்மை அலுவலரையோ அல்லது உதவி வேளாண்மை அலுவலரையோ அல்லது வங்கி கிளைகளையோ அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

விவசாயிகளின் நலனுக்காக தமிழ்நாடு அரசு செயல்படுத்திவரும் இப்பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் விவசாயிகள் தங்கள் மாவட்டங்களில் அறிவிக்கை செய்த பகுதிகளில் அறிவிக்கை செய்த பயிர்களைக் காப்பீடு செய்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



பொதுப்பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர், கள்ளக்குறிச்சி மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர் எ.வ.வேலு மற்றும் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் ஆகியோர் விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதியில், இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து காணை வடக்கு ஒன்றியம், கடையம் ஊராட்சிக்குட்பட்ட பாக எண் 6,7,8,9 ஆகிய பகுதிகளில் திராவிட மாடல் அரசின் பல்வேறு சாதனைகளை எடுத்துரைத்து உதயசூரியன் சின்னத்தில் வாக்குகளை சேகரித்தனர். இந்த நிகழ்வில் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் முன்னாள் எம்.பி. கௌதம சிகாமணி மற்றும் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

மக்களுக்குத் துரோகம் செய்ய நினைத்தால் –

# ஒன்றிய பா.ஜ.க. அரசை மக்கள் தூக்கி எறிந்து விடுவார்கள்!

## மக்களவையில் டி.எம்.கதிர்ஆனந்த் பேச்சு!

புதுடெல்லி, ஜுலை 4-

நாடாளுமன்ற மக்களவையில் குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மான விவாதத்தில் வேலூர் மக்களவைத் தொகுதி எம்.பி. டி.எம். கதிர் ஆனந்த் பேசியதாவது:-

எனது வேலூர் மக்களவைத் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராக நான் தொடர்ந்து இரண்டாவது முறையாக இங்கு வருவதற்கு வாய்ப்பளித்த தமிழக முதல்வரும், தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் அவருக்கு நான் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறேன்.

திராவிடப் பேரியக்கத்தின் மகத்தான தலைவர்களான தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் காட்டிய பாதையில் திராவிடப் பாரம்பரியத்தின் தியாக தீபத்தை தூக்கிப் பிடித்து பயணிக்கும் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடியரசுத் தலைவர் உரையில் நாட்டு மக்களை மிகவும் மோசமாகப் பாதிக்கும் பல்வேறு தொடர்புடைய பிரச்சனைகள் பற்றி எதுவும்குறிப்பிடப்படாதது மிகவும் வருத்தமாக ஏமாற்றமளிக்கும் விதமாக உள்ளது.

மோடி தலைமையிலான ஒன்றிய அரசு பணமதிப்பிழப்பு, ஜி.எஸ்.டி. வரி விதிப்பு போன்ற குறைபாடுள்ள பொருளாதாரத் திட்டங்களை ஒரு திறமையான வழிமுறையின்றி வகுத்ததால் இந்தியப் பொருளாதாரத்தின் மொத்த தோல்விக்கு இட்டுச் சென்றது, குறிப்பாக ரொக்கப் பணத்தை நம்பியிருக்கும் கிராமப்புறப் பொருளாதாரம் வீழ்ச்சி அடையும் விதமாக பண நெருக்கடி மற்றும் பொருளாதார மந்த நிலையை ஏற்படுத்தியது.

மாநில அரசுகளின் கோரிக்கைகளின்படி மத்திய-மாநில உறவுகளை மறுபரிசீலனை செய்வதற்கும், கூட்டுறவு கூட்டாட்சி தத்துவத்தை நிலை நிறுத்துவதற்கும் ஒன்றிய அரசால் உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறதா என்பது குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை.

குடியரசுத் தலைவர் உரையில், மாநில அரசுகளுக்கு, குறிப்பாக மத்திய அரசுக்கு அதிக வரி வழங்கும் தமிழகம் போன்ற பா.ஜ.க. அல்லாத ஆளும் மாநிலங்களுக்கு, மத்திய அரசின் சமமற்ற வரிப் பங்கீடு பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. உதாரணமாக, தமிழகத்தில் வெள்ள நிவாரணங்களுக்கும் புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக பேரிடர் நிவாரண தொகை ரூ.37,906 கோடி தமிழக அரசால் கோரப்பட்டது. ஆனால் இதுகாறும் வெறும் ரூ.276 கோடி மட்டுமே மத்திய அரசால் வழங்கப்பட்டது.



குடியரசுத் தலைவர் உரையில் கடந்த 10 ஆண்டுகளில் நடந்த விவசாயிகள் தற்கொலை மற்றும் அரசு எடுத்த உரிய தீர்வு நடவடிக்கைகள் குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை. விவசாயிகளின் குரல் செவி சாய்க்கப்படாமல் விடப்பட்டது, வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்பதால் வெற்றுக் திட்டமாகி விட்டது. பல மாதங்களாக போராட்டம் நடத்தியும் மத்திய அரசிடம் இருந்து இந்திய விவசாயிகள் எதிர்பார்த்த குறைந்த பட்ச ஆதரவு அவர்களுக்கு வழங்கப்படவில்லை.

பெண்களைப் பாதுகாப்பதாகவும், நாரி சக்தியை மேம்படுத்துவதாகவும் அரசாங்கம் பிரகடனம் செய்கிறது. ஆனால் உண்மையில் பெண்களின் அடிப்படை உரிமைகளைப் பறிக்கிறார்கள். MGNREGA திட்டம் அடிப்படையில் கிராமப்புற பெண்களுக்கு 100 நாட்கள் வேலை உறுதி மற்றும் வேலைவாய்ப்புகளை வழங்குவதாகும். ஆனால் இந்த ஒன்றிய அரசு MGNREGA திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டை குறைத்து கிராமப்புற பெண்களின் பொருளாதார சுதந்திரத்தை அழித்து வருகிறது. இது ஒன்றிய அரசின் நாரி சக்தி மேம்பாடு என்பது போலித்தனத்தின் உச்சம் என்பதை உணர்த்துகிறது.

### மணிப்பூர் கலவரம்!

வடகிழக்கு மாகாணங்களில் குறிப்பாக மணிப்பூர் மாநிலத்தில் இரு பிரிவினரிடையே மோதல் குறித்தும் அது சம்மந்தமாக ஒன்றிய அரசு ஏதேனும் நடவடிக்கைக எடுத்துள்ளதா? என்று குடியரசுத் தலைவர் உரையில் குறிப்பிடப்படவில்லை: மணிப்பூர் கலவரம் உலக அளவில் இந்தியாவுக்கு அவமானத்தை ஏற்படுத்தியுள்ளது. அங்கு கலவரத்தை கட்டுப்படுத்த ஒன்றிய அரசு முற்றிலுமாக தவறிவிட்டது. இந்த வன்முறையில் அதிகம் பாதிக்கப்பட்டது பெண்களும் குழந்தைகளும்தான் என்பது பெரு வருத்தமளிக்கிறது.

எஸ்டி / எஸ்சி / ஓபிசி இடஒதுக்கீட்டை அமல்படுத்துவதில் கவனம் மற்றும் மேலும் அதிக முயற்சி தேவை. இட ஒதுக்கீடு பலன்கள் இன்னும் முழுமையாக அடையப்படவில்லை என்பது என் கருத்து. யூஜி பிஜி பிஎச்டி சேர்க்கைக்கு NEET, CUET மற்றும் UGC NET போன்ற நுழைவுத் தேர்வுகளை ஒன்றிய அரசு திணித்ததால், ST/SC/OBC மாணவர்கள் மத்திய பல்கலைக்கழகங்களில் சேர்வதற்கு போராடுகிறார்கள். வினாத்தாள் கசிவு முறைகேடுகள், கிரேஸ் மார்க் மோசடிகள் மற்றும் மாணவர்களைத் தாக்கும் பல 6. விஷயங்களால் கல்வி அமைச்சகம், யுஜிசி மற்றும் என்டிஏ மோசமாகத் தோல்வியடைந்தன. தேர்வுகள் ரத்து செய்யப்பட்டன, மாணவர்கள் நன்கு தயாராகி விண்ணப்பம் மற்றும் பயணத்திற்காக பணம் செலவழித்தனர், ஆனால் இப்போது புதிய தேதிகளுக்காக காத்திருக்கிறார்கள். ஏன் இந்தக் குழப்பம். நீட் தேர்வு ஊழல் பூதாகரமாக மாறும் அபாயம் உள்ளது.

அதனால்தான் எமது முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழ்நாடு அரசு நீட் தேர்வு என்பதே தேவையில்லாத ஒன்று. ஒன்றிய அரசு நீட் தேர்வு நடத்துவதை திரும்ப பெற வேண்டும். இதே கருத்தை நானும் இந்த அவையில் ஒன்றிய அரசிடம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

ஜனாதிபதி அவர்கள் தனது உரையில் அனைத்து அத்தியாவசியப் பொருட்களின் வரலாறு காணாத விலை உயர்வைக் கட்டுப்படுத்த அரசு ஏதேனும் நடவடிக்கைகள் எடுத்துள்ளதா என்பது பற்றி குறிப்பிடத் தவறிவிட்டார். நாட்டில் உள்ள ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொரு மாத வரவு செலவுத் திட்டத்தில் தங்கள் விரல்களை சுட்டுக் கொள்கின்றனர். ஏழைத் தொழிலாளர் மற்றும் நடுத்தர மக்களின் வலியை பிரதமருக்கோ அல்லது நிதி அமைச்சருக்கோ புரிகிறதா என்று தெரியவில்லை.

### வேலையில்லாத் திண்டாட்டம்

நாட்டில் ஏற்பட்டுள்ள முன்னெப்போதும் இல்லாத வேலையில்லாத் திண்டாட்டம் மற்றும் நாட்டில் வேலைவாய்ப்பின்மைப் பிரச்சனையைச் சமாளிக்க அரசாங்கம் தவறியிருப்பது பற்றி குடியரசுத் தலைவர் தனது உரையில் குறிப்பிடப்பிடவில்லை. சுதந்திர இந்தியாவில் வேலையின்மை விகிதம் மிக அதிகமாக உள்ளது, தென்னிந்தியாவின் ரயில்களில் முன்னெப்போதும் இல்லாத வகையில் வட இந்தியாவைச் சேர்ந்த இளைஞர்கள் கூட்டம் அலை மோதுவதே நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சனை தலைவிரித்தாடுகிறது என்பதற்கு போதுமான சான்றாகும்.

நாட்டிலுள்ள சிறுபான்மை சமூகங்களுக்கு ஒன்றிய அரசு பாதுகாப்பு வழங்கத் தவறியமை பற்றி உரையில் எங்கேயும் குறிப்பிடப்படவில்லை.

தேசிய நெடுஞ்சாலைகளில் சுங்கக்கட்டண வசூல் என்பது ஒன்றிய அரசின் அனுமதியோடு நடக்கும் நெடுஞ்சாலை பகல் கொள்ளையாக மாறிவிட்டது. 2024 தேர்தலுக்குப் பிறகு, தமிழ்நாடு அனைத்து டோல்கேட்களிலும் சுங்கக் கட்டணம் உயர்த்தப்பட்டது. எனவே தேர்தலுக்கு முன் விலையை குறைத்து தேர்தல் முடிந்த உடனேயே விலையை உயர்த்துவது தேர்தல் ஸ்டண்ட். இது மக்களுக்கு செய்யும் துரோகம் மற்றும் அநியாயம்.

ஒன்றிய அரசு வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயில்களை அறிமுகப்படுத்தியுள்ளது, ஆனால் டிக்கெட்டுகளின் விலை மிகவும் அதிகமாக உள்ளது, இது ஏழை, நடுத்தர குடிமக்களால் வாங்க முடியாது. தொடர் ரயில் விபத்துகளாலும், உயிரிழப்புகளாலும் மக்கள் தற்போது ரயிலில் பயணம் செய்யவே அச்சப்படுகின்றனர்.

### தமிழ்நாட்டுப் பிரச்சினைகள்

தமிழ்நாட்டின் மதுரையில் எய்ம்ஸ் கட்டுவதற்கான நடவடிக்கைகள் இன்னும் தொடங்கப்படாதது பற்றி குடியரசுத் தலைவர் தனது உரையில் குறிப்பிடப்படவில்லை. 2015 பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டு, 2017ல் அனுமதி அளிக்கப்பட்டது. ஆனால், தமிழகத்தில் அமைந்திருப்பதால், ஒன்றிய அரசு உரிய நேரத்தில் நிதி ஒதுக்காததற்கு இதுவே காரணமாக இருக்கலாம். இது தமிழக மக்களுக்கு செய்யப்படும் அநீதி இல்லையா?

மிக முக்கியமான திட்டமான சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்டத் திட்டத்திற்கு ரூ.63,246 கோடியில் ஒன்றிய அரசு திட்டமாக அறிவிக்கப்பட்ட நிலையில், தற்போது தமிழ்நாடு அரசு செலவழித்து வருகிறது. அதற்கான தொகையை ஒன்றிய அரசு இதுவரை வழங்கவில்லை என்பது பெரிய துரோகம். ஒன்றிய அரசுக்கு தமிழ்நாடு மக்கள் மீது ஏன் இந்த ஓர வஞ்சனை?

### நீர்ப்பகிர்வு உரிமை

மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர்ப் பிரச்சினைகளைத் தீர்க்க, குறிப்பாக தமிழ்நாடு போன்ற நதிக்கரையோர மாநிலங்களின் நீர்ப்பகிர்வு உரிமைகளை நிலைநிறுத்துவதற்கு ஒன்றிய அரசு ஏதேனும் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்கிறதா என்பது குறித்த குடியரசுத் தலைவர் தனது உரையில் குறிப்பிடவில்லை.

மேலும் தமிழ்நாட்டின் பாரந்தூரில் கிரீன் ஃபீல்ட் விமான நிலையம் கட்டுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி குடியரசுத் தலைவர் உரையில் குறிப்பிடப்படவில்லை.

இந்தியாவில் கடல்சார் வணிகம் மற்றும் வர்த்தகத்திற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த சேதுசமுத்திரம் கப்பல் கால்வாய்த் திட்டம் பற்றி குடியரசுத் தலைவர் தனது உரையில் குறிப்பிடவில்லை என்பது வருத்தமளிக்கிறது.

### வேலூர் நாடாளுமன்ற தொகுதி பிரச்சினைகள்

2019 முதல் எனது வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் உள்ள நியூடவுன் வாணியம்பாடியில் LC 81 ரயில்வே கிராசிங்கின் குறுக்கே RoB அல்லது RuB கட்டுவதற்கு நான் பல முறை கோரிக்கை விடுத்தும் ஒன்றிய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அரசு கருவூலத்திற்கு கணிசமான அளவு அந்நியச் செலாவணி வருமானத்தை ஈட்டும் எனது வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் உள்ள தோல் மற்றும் ஐவுளிக் குழுக்களுக்கு நிதியுதவி வழங்க அரசு ஏதேனும் நடவடிக்கை எடுக்கிறதா என்பதை குடியரசுத் தலைவர் தனது உரையில் குறிப்பிடவில்லை.

காட்பாடி ரயில் நிலையம் மற்றும் சென்னை எழும்பூர் மற்றும் சென்ட்ரல் ரயில் நிலையங்களில் ரயில் நிலைய மறுசீரமைப்பு பணிகளை விரைவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்கிறதா என்பது குறித்து குடியரசுத் தலைவர் உரையில் குறிப்பிடப்படவில்லை.

வேலூர் விமான நிலையத்தை விரைந்து செயல்படுத்த ஒன்றிய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் மவுனம் சாதித்து தமிழக மக்களுக்கு மீண்டும் மீண்டும் துரோகம் செய்து வருகிறது.

பாரதீய ஜனதா கட்சி சார்ந்த எனது சகாக்களுக்கு நான் ஒன்றை நினைவூட்ட விரும்புகிறேன், நீங்கள் இப்போது 303ல் இருந்து 240 ஆகக் குறைக்கப்பட்டுள்ளீர்கள். இது உங்களுக்கு விடுக்கப்பட்ட ஒரு எச்சரிக்கை மணி. தொடர்ந்து மக்களுக்கு துரோகம் செய்தால் விரைவில் உங்களை ஆட்சியில் இருந்து தூக்கி எறிந்து விடுவார்கள். பிராந்திய அரசியலில் ஒரு எழுச்சி உள்ளது, கூட்டுறவு கூட்டாட்சி முறை பின்பற்றப்படா விட்டால், மக்கள் உங்களை மிக விரைவில் ஆட்சி அதிகாரத்திலிருந்து இறக்கி விடுவார்கள்.

இவ்வுரையை முடிப்பதற்கு முன், ஆளும் ஆட்சிக்கு ஒரு முக்கியமான விஷயத்தை நினைவுபடுத்த விரும்புகிறேன். ஐயா, மூன்றாவது முறையாக ஆட்சி அமைத்ததாக தயவு செய்து அதிகாரத்தின் உச்சபட்ச எல்லை மீறாதீர்கள். ஒருவர் தண்ணீரில் மூழ்கும்போது, இயற்கை அவருக்கு மூன்று வாய்ப்புகளைத் தரும். அதில் நபர் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முடியாவிட்டால், அவர் நீரில் மூழ்குவது உறுதி. இப்போது மக்கள் உங்களுக்கு மூன்றாவது வாய்ப்பு கொடுத்திருக்கிறார்கள். இது உங்களுக்கு வழங்கப்பட்ட கடைசி வாய்ப்பாக இருக்கலாம், என்பது இந்த நாட்டு மக்களுக்கு நீங்கள் எவ்வாறு சேவை செய்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது.

இந்த அவையில் இரண்டாம் முறையாக தேர்ந்தெடுக்கப்பட்ட நான் எனது தந்தையார் தமிழ்நாடு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களிடம் எப்படி அவரால் கடந்த 53 ஆண்டுகளாக தமிழ்நாடு சட்டப்பேரவை உறுப்பினராக இருக்க முடிந்தது அதுவும் தொடர்ந்து 13 முறை ஒரே சட்டமன்றத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டது எப்படி? என்று வினவினேன். அதற்கு அவர் ஒரு அற்புதமான பதிலைக் கூறினார். தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதி ஒருவருக்கு அவரது தொகுதியே கோவில். தொகுதி மக்களே தெய்வம் என்று நினைத்து அவர்களை மதித்து பணிபுரிந்தால் அது சாத்தியமாகும் என்று கூறியதை இங்கு நினைவில் கூறுகிறேன்.

எமது திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிறுவனர் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் “மக்கள் சேவையே மகேசன் சேவை” என்று சொன்னார்.

ஜனநாயகத்தில் மக்களுக்குச் செய்யும் சேவை என்பது கடவுளுக்குச் செய்யும் சேவை. நம் நாட்டின் ஏழை மக்களுக்கு சேவை செய்ய என்றும் மறக்காதீர்கள்.

இவ்வாறு டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. உரையாற்றினார்.

கர்நாடக மாநில கழகத்தினர்

# விக்கிரவாண்டியில் வாக்குச் சேகரிப்பு!

## மாநில அமைப்பாளர் ந.இராமசாமி தலைமையில்

விழுப்புரம், ஜுலை 4 -

கருநாடக மாநில தி.மு.க. சார்பில் மாநில அமைப்பாளர் ந.இராமசாமி தலைமையில் இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் மு.இராஜசேகர், எம்.முருகானந்தம், முகமது ஆரிப் மற்றும் தினேஷ் யோகேந்திரா, து.பிரபு, சதீஷ், பிரசன்னா, ஜெ.தனுஷ் ஆகியோர் விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத் தேர்தலில் வாக்குச் சேகரித்தனர்.

தமிழகத்தில் விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதியில் - ஜுலை 10.7.2024 தேதியில் நடைபெறும் இடைத் தேர்தலில் இந்திய கூட்டணியில் உச்சம் தொட்ட இமயம் திராவிட மாடல் அரசியல் ஒளிவிளக்கு 40 - 40 ம் வென்ற மக்கள் போற்றும் தலைவர் தமிழ்நாடு முதல்வர் தளபதியார் அறிவித்துள்ள கழக வேட்பாளர் அன்னியூர் சிவா, வெற்றிக்காக தொகுதி வாக்காளர்கள் வீடு தோறும் அணுகி துண்டு அறிக்கை அளித்து உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து கழக வேட்பாளர் வெற்றிக்கு ஆதரவு கேட்டு வாக்கு சேகரித்தனர்.



விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத்தேர்தலில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவாவைஆதரித்து விக்கிரவாண்டி தெற்கு ஒன்றியம் முட்டத்தூரில் தி.மு.க. நிர்வாகிகள் பாக முகவர்கள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டத்தில் சிறு, குறு மற்றும் தொழில் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார். அருகில் மாநில தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மரக்காணம் ஒன்றிய துணை சேர்மன் பழனி உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.